மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com
04.10.2022 செவ்வாய்க்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# 22ற்குள் 13, வாக்களிப்பதற்கு மொட்டுக்கட்சியினர் பின்நகர்வு

22ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமாயின் அதற்குரிய திருத்தத்திற்கு வாக்களிப்பது குறித்து ஆழமாக சிந்திக்க வேண்டும் என ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற ஆளும் கட்சி உறுப்பினர்களின் கூட்டத்திலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பி.திஸாநாயக்க இது தொடர்பில் தனது கருத்தை கடுமையாக தெரிவித்துள்ளார். அத்துடன், 22ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த முனைந்தால், தேர்தலில் கடுமையான பின்னடைவை ஏற்படுத்துவதைத் தடுக்க முடியாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் திரு.சாகர காரியவசம் மேலும் தெரிவித்துள்ளார். எனினும் 22வது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை.



மட்டக்களப்பு வர்த்தகர்கள் சங்கத்தினால் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் (2021 வருடத்தில்) உயர் பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கான விசேட கௌரவிப்பு விழா மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் விடுதியில் இடம்பெற்ற போது..

# வியாழனற்று விசேட அறிக்கையை வெளியிடும் ஜனாதிபதி ரணில்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் வியாழக்கிழமை (6) பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை வெளியிட உள்ளார். ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கான விஜயம் தொடர்பில் ஜனாதிபதி கருத்து தெரிவிக்கவுள்ளதாக ஜனாதிபதி அலுவலகத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸிற்கான விஜயத்தின் நன்மைகள் தொடர்பில் இதன்போது நீண்ட விளக்கமளிக்கப்படவுள்ளதாகவும் ஜனாதிபதி அலுவலகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

# 13வது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு முற்றிலும் நான் எதிரானவன்

### நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சரத் வீரசேகர



13வது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு நான் முற்றிலும் எதிரானவன், இது இந்தியா நம்மை வற்புறுத்தியதால் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புத் திருத்தம். இந்த அரசியல் சட்டத் திருத்தத்தால், நமது நாடு முழுவதுமாக கூட்டாட்சியாக மாற உள்ளது. இவ்வாறு நேற்றைய நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சரத் வீரசேகர,ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் காரணமாக

02

# தமிழர்களின் நல்லிணக்கத்துடன் நாட்டில் சமாதானத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்த வேண்டும்

### கலாநிதி ஜெஹான் பெரேரா

(அஷ்ரப் ஏ சமத்)



இந் நாட்டில் நல்லிணக்கத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்கு எல்லா சமூகங்களுக்கிடையே ஓர் புரிந்துணவையும் ஏற்படுத்துதல் வேண்டும்.. அத்துடன் பெரும்பான்மையின மக்கள் சிறுபான்மை மக்களுக்கு எதிராகக் கொண்டுள்ள அல்லது வேண்டுமென்றே இனரீதியாகச் செய்கின்ற எல்லாக் காரியங்களும் உடன் நிறுத்தப்படல் வேண்டும். என கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்தார். இலங்கையின் இனப்பிரச்சினைகள் விடயத்தில் பலமுன்மொழிவுகளைச் செய்து வருகின்ற புத்திஜீவியும்,

02

# பாதுகாப்பு அமைச்சின் விசேட அறிவிப்பு

துப்பாக்கி உரிமம் வைத்திருக்கும் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு 2023 ஆம் ஆண்டுக்கான துப்பாக்கி உரிமத்தை புதுப்பித்தல் தொடர்பான விசேட அறிவிப்பை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது.அதன்படி,இந்த ஆண்டு அக்டோபர் 1ம் தேதி முதல் டிசம்பர் 31ம் தேதி வரை துப்பாக்கி உரிமங்களை புதுப்பிக்க முடியும். இது தொடர்பான தகவல்களையும் விண்ணப்பங்களையும் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளமான றறற.னநகநஉெந.டம இலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். 31.12.2022 க்குப் பிறகு 2023 ஆம் ஆண்டிற்கான துப்பாக்கி உரிமம் வழங்கப்பட மாட்டாது என்றும் சரியான உரிமம் இல்லாமல் துப்பாக்கி வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும் என்றும் பாதுகாப்பு அமைச்சகம் மேலும் அறிவிக்கிறது.

# குறையும் சீமெந்தின் விலை



சீமெந்து விலை அதிகரிப்பால் நிர்மாணத்துறையினர் எதிர்நோக்கும் சிரமத்தை கவனத்தில் கொண்டு சீமெந்து நிறுவனம் சீமெந்து மூடை ஒன்றின் விலையை 100 ரூபாவினால் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதன்படி இன்று (4) நள்ளிரவு முதல் 50 கிலோ கிராம் சீமெந்து மூடையின் விலை 100 ரூபாவினால் குறைக்கப்படவுள்ளது.

# தீபாவளி முற்பணம் 15000ரூபா வழங்க வேண்டும் : சஜித்

பெருந்தோட்டப் பகுதிகளில் வசிக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளியை கொண்டாடும் முகமாக சம்பந்தப்பட்ட தோட்ட நிர்வாகங்களினால் 5000 ரூபா முற்பண கொடுப்பணவுத் தொகை சில காலமாக வழங்கப்பட்டு வருவதாகவும், தற்போது நிலவும் பாரிய பொருளாதார

02



ஓய்வூதிய உரித்தற்ற பொது மக்களுக்கு 60 வயதின் பின் ஓய்வூதியம் ஒன்றினை கிடைக்கச் செய்யும் சமூக வேலைத் திட்டத்தில் முன்னிலை வகித்தோருக்கு சமூகப்பாதுகாப்பு தேசிய விருதுவிழாஇலங்கைசமூகப் பாதுகாப்பு சபையின் ஏற்பாட்டில் திருகோணமலையில் அண்மையில் நடைபெற்றபோது விருதுகளைப்பெற்றோரை படங்களில் காணலாம். ( படம் ரக்ஸனா)




# நாமல் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளார்

## விமலவீர திஸாநாயக்க



முன்னாள் ஜனாதிபதியின் மகன் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் தன்னைப் போலவே போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸநாயக்க தெரிவித்துள்ளார். கடுமையான பட்டினியால் வாடும் நாடுகளில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறித்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இலங்கையில் மாத்திரமன்றி, எந்தவொரு நாட்டின் வரலாற்றிலும் ஊட்டச்சத்து குறைபாடு ஓரளவிற்கு இருந்ததாகவும் ஆனால் ஊடகங்களில் அவ்வளவாக செய்திகள் வெளியாகவில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இப்போது முட்டை, பால் மா, மீன், இறைச்சி போன்றவற்றின் விலை அதிகமாக இருப்பதாகவும் மக்களால் அவற்றை வாங்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார். தான் மீன்கூட சாப்பிடுவதில்லை என்றும் அதனால் தான் இப்போது ஊட்டச்சத்து குறைபாட்டுடன் உள்ளதாகவும் மீனைக் கூட உண்ணாத நாமல் ராஜபக்ஷவும் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். பொலன்னறுவையைச் சேர்ந்த பளு தூக்கும் வீரரும் காய்கறிகளை மட்டுமே உண்கிறார் என்றும் அவருக்கும் ஊட்டச்சத்து குறைபாடு உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கை மக்களிடையே பட்டினியும் வறுமையும் பரவி வருவது மனித உரிமை மீறலாகும்

## சர்வதேச மன்னிப்புச் சபை

பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினால் இலங்கை மக்களிடையே பட்டினியும் வறுமையும் பரவி வருவது அவர்களின் மனித உரிமை மீறலாகும் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் சுகாதாரம், உணவு மற்றும் சமூக பாதுகாப்பு உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான 57 பக்க ஆய்வு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

**“We are near total breakdown”** என்ற கருப்பொருளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இந்த அறிக்கை, நாட்டின் உணவுப் பணவீக்கம், சுகாதாரப் பாதுகாப்பில் உள்ள குறைபாடுகள், வருமான இழப்பு, ஊட்டச்சத்து குறைபாடுகள் போன்றவற்றைப் பற்றிய முழுமையான பகுப்பாய்வை முன்வைத்துள்ளது. கடந்த ஏப்ரல் மாதம், மருந்துப் பொருட்களின் விலையை **40%** உயர்த்த சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியதுடன், ஓகஸ்ட் மாதத்திற்குள் 2 உயிர்காக்கும் மருந்துகள் உட்பட 188 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2 ஆயிரத்து 724 அத்தியாவசிய அறுவை சிகிச்சை சாதனங்கள் பற்றாக்குறையாக இருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 6.2 மில்லியன் மக்கள் அல்லது **28%** மக்கள் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்படுகின்றனர் என்றும் 5.7 மில்லியன் மக்களுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுவதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயர்தர பரீட்சையை பிற்போடாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து மனுதாக்கல்

கல்வி பொது தராதர பத்திர உயர்தர பரீட்சையை பிற்போடாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்படவுள்ளது. கொழும்பில் இன்றைய தினம்(04) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இதனை தெரிவித்துள்ளார். கல்வி பொது தராதர பத்திர உயர்தர பரீட்சையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடத்தவுள்ளதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. இந்நிலையில் பரீட்சையை பிற்போடுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சியின் தலைவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். எனினும் கல்வி பொது தராதர பத்திர உயர்த்தர பரீட்சையை பிற்போடுவதற்கு எவ்வித தேவையும் ஏற்படவில்லை என கல்வி அமைச்சர் நாடாளுமன்றில் அறிவித்திருந்தார். இந்நிலையிலேயே கல்வி பொது தராதர பத்திர உயர்தர பரீட்சையை பிற்போடாதிருக்க அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானத்தை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

# ஒரு மில்லியன் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு



பாடசாலை மாணவர்களில் மேலும் ஒரு மில்லியன் பேருக்கு பாடசாலை மதிய உணவு திட்டத்தை விரிவுபடுத்தும் வகையில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான நிதியை வெளிநாட்டு மானியங்கள் மூலம் வழங்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பூரண சத்தான உணவை வழங்கும் வகையில் 7,926 பாடசாலைகளில் உள்ள 1.08 மில்லியன் மாணவர்கள் இத்திட்டத்தின் இலக்காக உள்ளனர். வருடாந்தம் 4 பில்லியன் ரூபாய் செலவில் பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் வேலைத்திட்டத்தை அரசாங்கம் தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மீனவர்களுக்கு வழங்கப்பட உள்ள நிவாரணம் தொடர்பில் திருமலை மாவட்ட மீனவர்களுக்கு அநீதி

**ரவ்பீக் பாயிஸ்**

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் நிதி மூலம் மீனவர்களுக்கு வழங்கப்படவுள்ள நிவாரணம் தொடர்பில் திருகோணமலை மாவட்ட சிறுமீன்பிடி மீனவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு விசாரணை வேண்டும் எனவும் மகஜரில் கையொப்பம் சேகரிக்கும் நிகழ்வு இன்று (04) திருகோணமலை மணிக்கூட்டு கோபுர சந்தியில் இடம்பெற்றது. ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் நிதி உதவியினை சிறு மீன்பிடி சிறுதொழில் மற்றும் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் அனைவருக்கும் பெற்றுக் கொடு எனும் தொனிப்பொருளில் குறித்த கையொப்பம் சேகரிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கையில் மிகவும் ஆபத்து நிலைக்கு உட்படக் கூடிய மாவட்டங்களில் உள்ள மீனவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்காக மாதாந்தம் ரூபா 15,000 பிரகாரம் மூன்று மாதங்களுக்கு வழங்குவதை அரசு வழங்க முன்வந்துள்ளதை நாம் பெரிதும் மதிக்கின்றோம் என அகில இலங்கை பொது மீனவர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது. எனினும் மீன்பிடி மற்றும் நீரியல் வள திணைக்களத்தின் ஊடாக இயந்திரமில்லாத மீன்பிடி படகுக்காரர்களுக்கு இந்நிதியுதவி வழங்கப்பட்டாலும், அது திருகோணமலையில் முறையாக செயல்படுத்தப்படாமை குறித்து தாம் கவலை அடைவதாக அகில இலங்கை பொது மீனவர்கள் சம்மேளேனம் கவலை தெரிவித்துள்ளது. இயந்திரமில்லாத படகுக்காரர்களின் பட்டியலைத் தயாரித்த மீன்பிடி திணைக்களம், திருகோணமலை மாவட்டத்தின் 1758 மீனவர்களில் 783 பெயர்களை மட்டும் தெரிவுசெய்திருப்பதில் ஏனைய மீனவர்களுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக ஏற்படும் முறைகேடுகளை பரீட்சிப்பதற்காக கண்காணிப்புக் குழுக்கள் உங்கள் நிதியத்தின் பெயரில் செயல்பட்டாலும், அவர்களின் பரிசோதனை நடவடிக்கைகளும் கூட பக்கசார்பு இல்லாத முறையில் நடைபெறவில்லை. பரிசோதகர்கள் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் போதுமான தலையீட்டை மேற்கொள்ளவில்லை என குறித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே தாம் கோருவது இயந்திரமில்லாத மீன்பிடி படகுகளை பாவிக்கும் மீனவர்கள் என்ற வகையில் எங்கள் அனைவருக்கும் இந்நிதியுதவி கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தமது வேண்டுகோளாக இருப்பதாகவும் அகில இலங்கை குது மீனவர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது. மேலும் பெயர் பட்டியலைத் தயாரிக்கும்போது ஏனைய மீனவர்களின் பெயர்கள் எவ்வாறு தவறிப்போனது என்பதை விசாரணை மேற்கொள்ளுமாறும் அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மகஜரில் கையொப்பம் சேகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

# கோப் குழுவிற்கு சரித ஹேரத்-எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பரிந்துரை

கோப் குழுவிற்கு முன்மொழியப்பட்ட கலாநிதி ஹர்ஷ டி சில்வா தன் சுய விருப்பின் பேரில் இராஜினாமா செய்தமையால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு பேராசிரியர் சரித ஹேரத்தின் பெயரை முன்மொழிவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று (04) பாராளுமன்றத்தில் தெரிவித்தார். கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைவர்கள் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்குமாறு தாம் பல தடவைகள் பகிரங்கமாக கோரிக்கை விடுத்ததை நினைவுகூர்ந்த எதிர்க்கட்சித் தலைவர்,அதற்கு சபாநாயகரும் இணங்கியதாக சுட்டிக்காட்டிய அவர், தற்போதைய ஜனாதிபதியும் அன்று பிரதமராக இருந்த போது இதே கருத்தைக் கொண்டிருந்தார் என்றும் அந்நிலைப்பாடு இன்று மாறியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். இதேவேளை,இருபத்தி இரண்டாவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கான பிரேரணை வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமா என வினவிய எதிர்க்கட்சித் தலைவர்,அவ்வாறு சமர்ப்பிக்கப்படவில்லையென்றால்,ஐக்கிய மக்கள் சக்தியினால் முன்வைக்கப்பட்ட இருபத்தியோராம் திருத்தப் பிரேரணையை பாராளுமன்றத்திற்குக் கொண்டு வருமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

## 13வது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு

எமது நாட்டின் ஒற்றையாட்சி ஓரளவிற்கு பேணப்படுகின்றது. எனவே, அதிகாரங்களை நீர்த்துப்போகச் செய்யும் வகையில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமாயின் அது பிரிவினைவாதிகளின் நோக்கத்தை அடைய உதவும். 22ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக 13ஆவது திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளது

“நேற்று நடைபெற்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் 22ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் கலந்துரையாடும் போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ள ஆணை புதிய அரசியலமைப்புக்கே அன்றி திருத்தங்களுக்கு அல்ல என தெரிவித்தேன். அதற்காக திரு.கோட்டாபய ராஜபக்ஷ, திரு. மனோஹர டி சில்வா, திரு.ரொமேஷ் டி சில்வா போன்ற அரசியலமைப்பு நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றை நியமித்து, அதனைத் தயாரித்து வழங்குவதற்கு இரண்டு வருடங்களைச் செலவிட்டுள்ளார். அப்படியிருக்கையில், அதை ஏன் படிக்காமல் திருத்த முயல்கிறோம் என்று கேள்வி எழுப்பினேன் என தெரிவித்துள்ளார்.

## தீபாவளி முற்பணம் 15000ரூபா

நெருக்கடி காரணமாக அத்தொகை போதுமானதாக இல்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். எனவே,அரசின் தலையீட்டின் பேரில்,தீபாவளி பண்டிகையை கொண்டாடும் முகமாக, குறைந்தபட்சம்,15,000 ரூபாவேனும் முற்பணமாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இன்று (4) பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விஷேட கோரிக்கையை முன்வைத்தார்.

## தமிழர்களின் நல்லிணக்கத்துடன் நாட்டில்

தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் கலாநிதி ஜெஹான் பெரோ நேற்று திங்கட் கிழமை அக்டோபர் 03 – முன்னைய ஆணைக்குழுவின் அறிக்கைகளை ஆராயும் ஜனாதிபதிக் கமிசன் தலைவர் உயர்நீதிமன்ற நீதியரசர் திலிப் நாவஸ் தலைமையில் பண்டாரநாய்கக சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் துலிப் அரையில் கூடியது. இவ் ஆணைக்குழு முன் தோன்றி கலாநிதி ஜெஹான் பெரோ கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ் ஆணைக்குழுவில் ஏனைய அங்கத்தவர்களான முன்னாள் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ,யாழ்ப்பாண முன்னாள் மேயர் லோகேஸ்வரி பத்மநாதன், முன்னாள் அரச அதிபர் நிமல் அபேரத்தினவும் மற்றும் சட்டத்திணைக்கள அலுவலகர் ஒருவரும் அங்கு சமுகமளித்திருந்தனர்.

அவர் தொடர்ந்து அங்கு ஆணைக்குழு முன் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் சிபார்சுகளை இந்த ஆணைக்குழு பரிந்துரைக்கு முன்வருமானால் அதனைத் தான் வரவேற்பதாகக் குறிப்பிட்டார். அப்படியானதொரு கட்டமைப்பினை நிறுவுவதற்கு எல்லா மக்களது அங்கிகாரத்தினையும் சம்மத்தினையும் பெறல் வேண்டும். தென்ஆபிரிக்காவில் இன்பிரச்சினைக்குத் தீர்வுகள் மற்றம் விசாரணைகள் திறந்த வெளியரங்கில் அதனை அந்த நாட்டில் வாழும் சகல மக்களும் அறியக் கூடியதாகவே நேரடியாகத் தொலைக்காட்சி மூலம் அறியப்படுத்தப்பட்டு வந்த முறைமை இலங்கையிலும் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். நமது நாட்டில் நடைபெறுகின்ற சகல ஆணைக்குழுவின் சாட்சியங்கள் மூடிய அரையில் வைத்தே நடைபெறுகின்றது. இம்முறைமை மாற்றப்படல் வேண்டும். எனவும் ஜெஹான் பெரேரா தெரிவித்தார். தொடாந்து அவர் கருத்து தெரிவிக்கையில்

தென் ஆபிரிக்காவில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு செய்தது போன்று எல்லாக் கட்சியினரும் இதற்கு ஆதரவு வழங்கப்படல் வேண்டும். அத்தோடு மக்கள் இது என்ன நோக்கத்தில் உருவாக்கப்படுகின்றதோ அந் நோக்கத்திலும் ஒரு புரிந்துணர்வினை ஏற்படுத்துதல் வேண்டும். புலம் பெயர்ந்த தமிழர்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ஒன்றாகக் கலந்துரையாடப்பட்டு அவர்களின் நல்லிணக்கத்துடன் இந்த நாட்டில் சமாதானத்தையும் புரிந்துணர்விணையும் ஏற்படுத்துதல் வேண்டும். என்றும் அவர் அங்கு கூறியதோடு அதிகாரப் பரவலாக்கல் உடனடியாக நிறைவேற்றப்டல் வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் 47 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. அதில் கடந்த ஆண்டு இலங்கைக்கு சார்பாகா 11 நாடுகள் ஆதரவு தெரிவித்தன இம்முறை 6 நாடுகளே ஆதரவு தெரிவிக்க உள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளிவந்துள்ளன.. இவ்வாறு எமது நாடு பொருளாதார நெறுக்கடியில் சிக்கித் தவிக்கும் காலகட்டத்தில் மீளவும் நாம் பின்நோக்கிச் செல்ல வேண்டி ஏற்படும். எமது நாடு பற்றி சர்வதேச மட்டத்தில் பிழையான பின்னடைவுகளை நாம் எதிர்நோக்கலாம். உதவி வழங்கும் நாடுகள் பின்னடையாலாம். கடந்த காலததில் சில அரசியல் வாதிகள் இனரீதியாக செயல்பட்டதானாலேயே இவ்வாறதொரு நிலைமைக்கும் பிரச்சினைகளும் எமது நாட்டில் மேலோங்கின. இந்த நாட்டில் ஆட்சிக்கு வந்த பல அரசியல் தலைமைகள் கடந்த 25 வருட காலகமாக பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன.அந்த ஆணைக்குழுக்கள் முன்னெடுக்கப்பட்ட பரிந்துரைகளை கிடக்கில் போடப்பட்டன். அவைகள் இனவாதமாக சில கட்சிகள் அதனை தூக்கிப் பிடிப்பதனால் அவ் அறிக்கைகள் காணமால் போகிவிட்டன. இந்த நாட்டின் தேசிய கீதத்தினைக் கூட தமிழ் மொழியில் சிறுபான்மை மக்கள் கேட்பதற்கும் பாடுவதற்கும் தடை விதித்தார்கள். இந்த நாட்டில் உள்ள பிரதான அரசியல் கட்சிகள் இணைந்து இந்த நாட்டில் வாழும் தமிழ் முஸ லிம் மற்றும் மலையக மக்களது அதிகாரப் பரவலாக்கல் போன்ற பிரச்சினைகளையும் அவர்களுக்குரிய உரிமைகளையும் கலந்தாலோசித்து வழங்கப்படல் வேண்டும..எனவும் ஜெஹான் பெரோரா அங்கு தெரிவித்தார்.



# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி

இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25039 | ப + க | 1985**
மானிப்பாய் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 01

**21792 | வே | 1993**
மானிப்பாய் | இந்து |Diploma
Medical Executive
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

**21957 | வே | 1991**
வேலணை | இந்து | BSc
Quantity Surveyor
திருவாதிரை (மிதுனம்)
170 செ.மீ | செவ்: 12

**21903 | வே | 1993**
மூளாய் | இந்து | BSc
IT Trainee
பூசம் (கடகம்)
170 செ.மீ

**24619 | வே | 1990**
யாழ்ப்பாணம் | கத்தோலிக்கம்
BD | Team Leader
சுவாதி (துலாம்)
170 செ.மீ

**21855 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | A/L
Associate Manager
பூரட்டாதி (கும்பம்)
175 செ.மீ

**25069 | வே | 1986**
பருத்தித்துறை | இந்து | BA
CIMA | Accountant
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 08

**21795 | வே+கோ| 1995**
கோப்பாய் | இந்து | A/L
Cashier | ஜேர்மனி
பூரம் (சிம்மம்)
167 செ.மீ | செவ்: 12

**24955 | சா | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Own Business
சித்திரை (துலாம்)
187 செ.மீ

**23851 | வே | 1976**
அச்சுவேலி | இந்து | A/L
Own Business
சுவாதி (துலாம்) | Canada
172 செ.மீ | சூ.செவ்: 04

**22549 | வே | 1988**
காரைநகர் | இந்து | B.Eng
Mechanical Engineer
கார்த்திகை (ரிஷபம்)
165 செ.மீ

**25048 | வே | 1991**
கோப்பாய் | இந்து | Master
Degree | Banker
சித்திரை (கன்னி)
177 செ.மீ | சூ.செவ்: 06

**22230 | வே | 1988**
கொக்குவில் | இந்து
Diploma | Receptionist
சுவாதி (துலாம்) | France
167 செ.மீ | செவ்: 02

**22224 | வே | 1988**
திருநெல்வேலி | இந்து | BSc
Exe.Mechanical Engineer
கேட்டை (விருச்சிகம்)
170 செ.மீ | Singapore

**21912 | வே | 1990**
கொக்குவில் | இந்து | MSc
Software Engineer
திருவோணம் (மகரம்) | ஜேர்மனி
180 செ.மீ | Divorced

**22179 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | HNDM
Reagional Manager
உத்தராடம் (தனுசு)
192 செ.மீ | செவ்: 04

**21996 | வே | 1990**
நெல்லியடி | கத்தோலிக்கம்
BSc | Engineer
187 செ.மீ

**22068 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | BSc
Software Engineer
மகம் (சிம்மம்)
180 செ.மீ | செவ்: 04

**21891 | வே | 1992**
காரைநகர் | இந்து | BSc
Software Engineer
பூரட்டாதி (மீனம்) | USA
186 செ.மீ | செவ்: 07

**22146 | வே | 1993**
வேலணை | இந்து
BSc | Lecturer
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | செவ்: 04

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**22264 | கோ | 1987**
கரவெட்டி | இந்து | Msc
Civil Engineer
பூரட்டாதி (கும்பம்)
160 செ.மீ

**21711 | வே | 1990**
நல்லூர் | இந்து
MBBS | Doctor
சதயம் (கும்பம்)
162 செ.மீ

**21645 | கோ | 1996**
புளியங்கூடல் | இந்து | A/L
Pharmacy Assistant
உத்தரம் (சிம்மம்)
165 செ.மீ

**22261 | வே | 1996**
ஈச்சமோட்டை | RC | Diploma
Accounts Assistant
சுவாதி (துலாம்)
157 செ.மீ | செவ்: 12

**22164 | வே | 1998**
காரைநகர் | இந்து | A/L
Student (BSc)
திருவாதிரை (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**22258 | கு | 1987**
முல்லைத்தீவு | இந்து | MBBS
MD | Doctor
மகம் (சிம்மம்)
164 செ.மீ

**22167 | சா | 1991**
பண்டத்தரிப்பு | இந்து | BA
Development Officer
பூரம் (சிம்மம்)
165 செ.மீ | சூ.செவ்: 09

**21882 | வே | 1992**
மீசாலை | இந்து | BD
Regulatory Affairs
Specialist | மகம் (சிம்மம்)
160 செ.மீ | France | செவ்: 02

**21831 | வே | 1995**
திருநெல்வேலி | இந்து
A/L | Junior Executive
கேட்டை (விருச்சிகம்)
146 செ.மீ | செவ்: 01

**22053 | தே | 1992**
மாத்தளை | இந்து
BD | PGD | Doctor
உத்தரம் (கன்னி)
157 செ.மீ | செவ்: 08

**21966 | கு | 1988**
காங்கேசன்துறை | இந்து
MBBS | Doctor
சுவாதி (துலாம்)
152 செ.மீ | செவ்: 02

**21675 | கு | 1992**
பருத்தித்துறை | கத்தோலிக்கம்
A/L | Teacher
மிருகசீரிடம் (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**21738 | கோ | 1992**
கரவெட்டி | இந்து | PD
Lab Incharge | UK
உத்தராடம் (மகரம்)
172 செ.மீ | செவ்: 12

**25075 | வா.செ | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Diploma | Teacher
மகம் (சிம்மம்)
174 செ.மீ

**22101 | கோ | 1995**
மூளாய் | இந்து | MBBS
Lecture & Consultant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 12

**22657 | வே | 1991**
கொக்குவில் | இந்து
Student (Music course)
ரேவதி (மீனம்)
162 செ.மீ

**25036 | அ | 1993**
கொழும்பு | இந்து | Diploma
Senior Business Analyst
அத்தம் (கன்னி)
162 செ.மீ

**25006 | இ.வே | 1993**
அளவெட்டி | இந்து
BSc | Nurse | UK
உத்தரட்டாதி (மீனம்)
158 செ.மீ

**22206 | கோ | 1993**
அச்சுவேலி | இந்து
A/L | Job Seeker
சதயம் (கும்பம்)
157 செ.மீ | செவ்: 01

**21930 | கோ | 1999**
அல்வை | இந்து
ACCA | Executive
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 12

## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# இலங்கையில் இந்து சமய புரட்சிக்கு வித்திட்டவர் உமா மகேஸ்வரன்!

## எட்டு வருட அர்ப்பணிப்பானசேவையை நிறைவு செய்து இன்று உயர் பதவிக்காக விடைபெறுகிறார்

இலங்கையில் இந்து சமய கலாசார திணைக்களத்தில் பாரியதொரு புரட்சியை ஏற்படுத்தியவர் அதன் பணிப்பாளர் அருளானந்தம் உமா மகேஸ்வரன் .

நாளை (5) ஐந்தாம் தேதி விஜயதசமி அவர் தனது எட்டு வருட கால இந்து சமய அர்ப்பணிப்பான சேவையை நிறைவு செய்து வட மாகாண சபையின் உயர் பதவிக்காக விடைபெறுகிறார்.

2014 ஆம் ஆண்டு இந்து சமய கலாச்சார திணைக்களத்தில் பிரதிப்பணிப்பாளராக இணைந்து, 2015 பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றார் .

அதன் பலனாக கடந்த எட்டு வருட காலமாக திணைக்களத்தில் பாரிய மாற்றங்களை, புரட்சிகளை செய்து வந்தவர் இன்றைய தினம் அத்திணைக்களத்தை விட்டு விடை பெறுகின்றார்.

இலங்கையை நிர்வாக சேவையில் அதியுயர் சிறப்பு பிரிவுக்கு கடந்த வாரம் தரம் உயர்த்தப்பட்டிருந்தார். அதன் பலனாக அவர் வடமாகாண சபையின் உயர் பதவிக்காக விடுவிக்கபட்டிருக்கின்றார்.

அ. உமாமகேஸ்வரன் இந்தப் பெயர் காலம் உள்ளளவும் இந்து சமய கலாசார அலுவல்களின் திணைக்களத்தின் வரலாற்றில் என்றும் ஒரு அத்தியாயம். மிகச்சிறந்த திருப்புமுனை கொண்ட அத்தியாயம். அசைக்கமுடியாத ஆளுமையின் அடையாளம்.

வந்தோம் வாழ்ந்தோம் என்பதும் வாழ்க்கைதான். எதைச் சாதித்தோம் என்ற கேள்விக்கு இங்கு பலரிடம் விடை இல்லை. செயல் வீரர்கள் அதிகம் பேசிக்கொள்வதில்லை. ஆனாலும் அவர்கள் கடந்து செல்லும் பாதை ஆழமான அர்த்தம்மிக்க வரலாற்றுத் தடத்தைப் பதித்துச் செல்லும்.



தமிழ் இலக்கிய வரலாற்றில் சோழர் காலம் ஒரு பொற்காலம். இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வரலாற்றில் உயர்திரு உமாமகேஸ்வரன் அவர்கள் காலம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதொரு பொற்காலம்.

ஆலயங்களின் வளர்ச்சிக்கு அரசியல்வாதிகளின் அழுத்தங்களையும் தாண்டி அர்ப்பணிப்பான பங்களிப்பு - பிரதேச வாதம் என்ற பேச்சுக்கு இந்த ஆளுமையாளனின் அகராதியில் இடமில்லை. யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற சங்கத் தமிழனின் வார்த்தையை நெஞ்சத்தில் இருத்தி செயலாற்றிய பெருந்தகையாளன் உயர்திரு உமாமகேஸ்வரன் அவர்கள்.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் உருவத்தில் மாறியது. உள்ளடக்கத்தில் மாறியது. செயற்பாட்டில் மாறியது.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பெயரும் விருதுக்குப் பரிந்துரை செய்யப்படும் அளவிற்கு நிர்வாகச் செயற்பாடுகள் உயர்திரு உமாமகேஸ்வரன் அவர்கள் காலத்தில் உயர்ந்தது என்பதற்குப் பெற்றுக்கொண்ட விருதுகள் சான்று.

இந்து சமய அறநெறிக் கல்வி ஆழமானது. அகலமானது. அழகுறக் கற்றுக்கொண்டால் அற்புதமானது என்பதை எல்லோரையும் உணரச்செய்த செயற்றிட்டம். இளம் இந்துச் சிறார்களின் இதயங்களில் உள்ள தெய்வீகத் தாமரையை மலரவைக்கவல்லது அறநெறிக் கல்வி. இந்தப் பேருண்மை உயர்திரு உமாமகேஸ்வரன் அவர்கள் காலத்தில் நிஜமானது. நாடெங்கும் அதுவே பேசுபொருளானது.

ஈழத்திருநாட்டில் எந்த மதத்தவர்களின் அறநெறிப் பாடசாலைகளும் செய்யாத சாதனையை இந்து சமய அறநெறிப் பாடசாலைகளைச் செய்ய வைத்த பெருமை உயர்திரு. உமாமகேஸ்வரன் அவர்களையே சாரும்.

இளம் இந்துச் சிறார்களின் ஆளுமைகளை வெளிக்கொணரும் சாதனையாக அமைந்த - தேசிய ஆக்கத்திறன் விருது - அறநெறிப் பாடசாலைகளின் திறம்பட்ட நிர்வாகங்களுக்கான தேசிய கௌரவம் - அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான தேசிய சேவை மேன்மை விருது ஆகியவை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சாதனையின் ஒரு மைல்கல்.

இந்து சமய கலாசாரக் கற்கைகள் நிறுவகத்தை வடக்கில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் கற்கைகள் நிறுவகமாகவும் - கிழக்கில் சுவாமி விபுலானந்தர் கற்கைகள் நிறுவகமாகவும் - ஏனைய மாகாணங்களுக்காகத் தலைநகரிலே சேர்.பொன். இராமநாதன் கற்கைகள் நிறுவகமாகவும் அமைத்து இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வரலாற்றில் நின்று நிலைக்கும் எத்தனையோ பணிகள் இன்றும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்த அரும்பணியின் பிதாமகன் உயர்திரு உமாமகேஸ்வரன் அவர்கள்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இந்துப் பண்பாட்டு நிதியத்தை செழிப்படையச் செய்த பெருமையும் அந்த நிதியம் மூலமாக காலத்தால் அழியாத பல செயற்பாடுகளை முன்னெடுத்த பெருமை உயர்திரு உமாமகேஸ்வரன் அவர்களையே சாரும். அவை வார்த்தைகளால் பட்டியல் இட்டுச் சொல்ல முடியாத அளவுக்கு எண்ணிறைந்தவை. அத்தனையும் காத்திரமானவை.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு, முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் மாநாடு, உலக அரங்கையே ஒன்று கூட்டிய முருகபக்தி மாநாடு அப்பப்பா இப்படியும் ஒரு மனிதனால் சாதித்துக் காட்ட முடியுமா எனத் திகைக்க வைத்த தருணங்கள் அவை.

கலைஞர்களுக்கான கௌரவம், ஆராய்ச்சி மாநாடுகள், நாட்டாரியல் வழக்காறுகளுக்கு முக்கியத்துவம் தரும் செயற்பாடுகள், பொங்கல விழா, புத்தாண்டு விழா, நவராத்திரி விழா அடடா இப்படி எத்தனையோ முத்திரை பதித்த நிகழ்ச்சிகளை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் செய்தது என்று நாம் அனைவரும் மார்தட்டிச் சொல்லலாம் என்றால் அதற்குக் காரணம் உயர்திரு உமாமகேஸ்வரன் அவர்கள்.

அருள்நெறி விழா, கந்தபுராண எழுச்சி விழா, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தோடு இணைந்து தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் என அத்தனையும் இந்து சமய அறநெறிப் பாடசாலைகளையும் ஆன்மிகத்தையும் இணைத்து ஒரு கோட்டில் பதிக்க வைத்தவை.இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வரலாற்றில் நின்று நிலைப்பவை.



விபுலமாமணி
கலைச்சுடர்
வி.ரி.சகாதேவராஜா
முன்னாள் தலைவர்
சுவாமி விபுலானந்த
ஞாபகார்த்த பணிமன்றம்
காரைதீவு.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தொடக்கப்பட்ட காலம் முதல் ஆராய்ச்சி மற்றும் அறநெறி சார்ந்த நூல் வெளியீடுகள் சிறப்புற நிகழ்ந்த வண்ணமே உள்ளன. ஆனாலும் உயர்திரு உமாமகேஸ்வரன் அவர்கள் காலத்தில் இத்துறையிலும் புதுமெருகினைக் காணக்கூடியதாக இருந்தது என்பது எவராலும் மறுக்க முடியாத பேருண்மை.

நல்லூர்க் கந்தப்பெருமானின் காலடிகளில் வைத்து இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நூல் வெளியிட்டது உலக வரலாற்றில் முதல் நிகழ்வாக அமைந்தது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் படைத்த கந்த புராண வசனம் மீள்பதிப்பே அந்த வெளியீடாகவும் அமைந்தது.

இந்து சமய அறநெறிக் கல்வி சார்ந்த நூல்கள் உலகத் தரம் வாய்ந்தவையாக மாற்றம் பெற்றன. கொரோனா காலம் அத்தனை அரச நிர்வாகச் செயற்பாடுகளையும் முடக்கியபோதும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாகப் புதிய பரிணாமம் எடுத்தது. வானொலி ஊடகங்கள் மூலம் இணையத்தளங்கள் முகநூல் வழியாக அந்தவேளையிலும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தைப் பயணிக்க வைத்த பெருமை உயர்திரு உமாமகேஸ்வரன் அவர்களையே சாரும்.

இப்படி இந்த ஆளுமையாளனின் செயற்பாடுகளை நாம் சொல்லிக்கொண்டே போகலாம். யாரையும் திணித்து வேலை வாங்க விரும்பாத மனோபாவம். எடுக்கின்ற சம்பளத்திற்கு கொஞ்சமாவது வேலை செய்யுங்கள் அது போதும் என்பதே கடமை பொறுப்பேற்க வருபவர்களிடம் அவர் கேட்கும் ஒரேயொரு கோரிக்கை.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு எவராலும் நிரப்பப்பட முடியாத இடத்தை இந்தப் பதவி உயர்வு ஏற்படுத்திவிட்டது.

இனி ஒரு பயணம் எமக்கு அந்தப் பெருந்தகையாளனோடு இல்லை என்பதை எண்ணும்போது இதயம் கனக்கிறது.

வார்த்தைகள் மௌனிக்கின்றன.

உதடுகள் கண்ணீரோடு புன்னகைக்கின்றன.

புன்னகை பதவி உயர்வு தந்த பெருமிதம்.

விழியோரம் தழும்பும் கண்ணீர் - கடந்த காலத்து நினைவுகளை மீட்பதன் அடையாளம்.

இப்படியொரு ஆளுமை மிக்க பண்பாளன் காலத்தில் நாமும் பணிபுரிந்தோம் என்பதில் பெருமை கொள்வோம்.







# ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தரப் பிரதிநிதி ஏ.எல்.ஏ. அஸீஸின் பார்வையில் மறைந்த டாக்டர் ஜெமீல்.

மறைந்த டாக்டர் ஜெமீலை ஒரு ஊடகமாகவும் கருப்பொருளாகவும் ஒரே நேரத்தில் அணுகுவது என்னுடைய நோக்கமாகும். என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தரப் பிரதிநிதியும் சிரேஷ்ட இராஜதந்திரியுமான ஏ.எல்.ஏ. அஸீஸ் வெளியிட்டுள்ள அனுபவ குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார். மறைந்த டாக்டர் எம் ஐ எம் ஜெமீல் அவர்களை பற்றி ஏ.எல்.ஏ. அஸீஸ், பல்வறு கோணங்களில் கருத்துத் தெரிவித்துள்ளார். அதில்,

இளைஞர் வழிப்படுத்தும், உள்ளடங்கியதும் பன்முகத்தன்மையானதுமான சமூக அமைப்பு கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்திலுள்ள சாய்ந்தமருதைச் சேர்ந்த மனிதாபிமானியும் சமூக சிந்தனையாளருமான டாக்டர் எம் ஐ எம் ஜெமீல் அவர்கள் செப்டம்பர் 23 வெள்ளிக்கிழமையன்று இவ்வுலக வாழ்விலிருந்து நீங்கிக் கொண்டார்கள். அவர்களது வாழ்க்கை பல பரிமாணங்களை கொண்டது. எனக்குத் தெரிந்த பார்வை ஒன்றையே நான் இங்கு பதிவு செய்ய விழைகிறேன். டாக்டர் ஜெமீல் அவர்களை ஒரு ஊடகமாகவும் கருப்பொருளாகவும் ஒரே நேரத்தில் அணுகுவது என்னுடைய நோக்கமாகும். இந்த மட்டுப்பாட்டுக்குள், இன்றைய காலத்திற்கு மிக முக்கிமான இளைஞர் வலுவூட்டல், இளைஞர் தலமைத்துவம், உள்ளடங்கியதும் பன்முகத் தன்மையானதுமான தேசிய, சமூக கட்டுமானங்கள் பற்றிய கருவூலங்களின் சில அம்சங்களை தொடவேண்டியுள்ளது. அத்தகைய பரிமாற்றம் காலத்தின் தேவையுமாகும்.


டாக்டர் ஜெமீல்

அண்மையில் கல்முனைக்கு பிரயாணம் செய்த போது சாய்ந்தமருதில் அன்னாரை சந்திக்க விரும்பினேன். நான் தங்கியிருந்த மேர்சா வீதியிலுருந்து மருத்துவமனை வீதியில் உள்ள அவரது வீடு வரை சென்று பார்த்தேன். எனினும் எனது துரதிஷ்டம் அன்னாரைக் காணக் கிடைக்கவில்லை. கடந்த 2020 ஆம் ஆண்டு நான் சந்தித்தபோது, அவர்கள் என்னை இரு கரம் நீட்டி வரவேற்றார்கள், அப்போது நாட்டிலும் சமூகத்திலும் என்ன நடக்கிறது என்ற கவலையை என்னுடன் பகிர்ந்து கொண்டு இலங்கையின் ஒவ்வொரு மட்டத்திலும் நல்லிணக்க முயற்சிகள் எவ்வாறு எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதற்கான யோசனைகளைப் பகிர்ந்து கொண்டார்கள். எனது எதிர்காலத் திட்டங்களைப் பற்றி என்னிடம் கேட்டதுடன் நான் தெரிவித்த கருத்துக்ககளில் என்னை மேலும் ஆர்வப்படுத்தினார்கள்.

முக்கியமாக, தனது மனைவியை அழைத்து, எனது வாப்பம்மாவின் குடும்ப வழி என்றும் நானும் அவர்களது மனைவியாரும் உறவினர்கள் என்றும் என்னை ˀஅறிமுகப்படுத்தினார்கள்ˀ. நான் அவர்களது மனைவியை நேரில் காணக் கிடைத்தது அது தான் முதல் முறை. இருப்பினும் எனது குடும்ப வட்டத்துக்குள் அவர்களது மனைவியின் பெற்றோர்கள் மற்றும் டாக்டர் ஜெமீல் பற்றியும் பல ஆண்டுகளாக மிகவும் வாஞ்சையுடன் பேசுவதை கேட்டிருக்கிறேன். சில மாதங்களுக்குப் பிறகு, அவர்களது அன்பு மனைவி திடீரென உயிர் நீத்த போது, திருமணத்தின் 50 வது ஆண்டு நிறைவை எட்டுவதற்கு இன்னும் கொஞ்ச காலமே இருந்தது. தனது மிகவும் நேசத்துக்குரிய நண்பரை இழந்ததற்காக ஆழ்ந்த வருத்தத்தை வெளிப்படுத்தும் அவர்களது சமூக ஊடக இடுகையைப் படித்ததும் நெஞ்சுரிகியது.

மறைந்த டாக்டர் ஜெமில் அவர்களை ஒரு சிறந்த மனிதர் என்று நான் அழைப்பேன் என்றால், அது அவர் சிறந்த ஆளுமைக்கு ஒரு சாதாரண வார்த்தையாகவே இருக்கும். அவர்கள் அதனையும் தாண்டிய ஒருவர். இனங்களுக்கிடையிலான மற்றும் மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தின் தேவை பற்றி அதீத நம்பிக்கை கொண்டிருந்தார்கள். ஆனால் அவ்வாறு நம்பியும் எதையும் செய்யாத சிலரைப் போலல்லாமல், அவர்கள் அதற்காக தன்னால் முடியுமான வரை தீவிரமாக உழைத்தார்கள். மேலும் அவர்களின் எழுத்துக்கள் சம்பாசணைகள் எல்லாம் அந்த செய்தியை வெளிப்படுத்துவதாகவே இருந்தன.



கிழக்கில் குறிப்பாக கல்முனை பிரதேசத்தில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் பரஸ்பர புரிந்துணர்வையும் இணக்கத்தையும் ஏற்படுத்த என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி நேரிலோ அல்லது தொலைபேசியிலோ நாம் நடத்திய ஒவ்வொரு உரையாடலிலும் விரிவாகப் பேசியதுண்டு. பல ஆண்டுகளாக தவறான புரிதல்களுக்கு உட்படுத்தப்பட்ட இரு சமூகங்களையும் ஒன்றிணைக்கதக்க சக்தி பெற்றிருந்தவர்கள் குறுகிய கால அரசியல் ஆதாயங்களுக்காக அவர்களை மேலும் பிளவுபடுத்துவதற்கு எத்தனிப்பதை இட்டு டாக்டர் ஜெமீல் அவர்கள் குறிப்பாக கவலை அடைந்து இருந்தார்கள். தமிழ் முஸ்லிம் உறவுககள் பலப்படுத்தப்படுவதன் மூலம் கிழக்கை தேசிய ஒற்றுமைக்கு முன்மாதிரியாக மாற்றியிருக்கலாம், அங்குள்ள சிங்கள சமூகத்துடனும் சேர்ந்து வலுவான உறவைக் கட்டியெழுப்பியிருக்கலாம் என்பது அவர்களது ஆழமான நம்பிக்கையாக இருந்தது.

ஒருவரை ஒருவர் மதித்தல் என்பதில் அவர்கள் ஒரு பரஸ்பரத்தன்மையை வெளிப்படுத்தினார்கள். எனினும் அவர்கள் மீதான எனது மரியாதை பல படிகள் உயர்ந்ததாகவே இருந்தது. அது அவரகளது நேர்மையான வாழ்க்கை முறை, விழுமியம் தழுவிய செயற்பாடுகள், நேரடியான கருத்தியல் பண்பு போன்ற குணாம்சம்களை மையப்பபடுத்தியது. அவரகளது சமூக சுற்றுச் சூழலில் பல முரண்பாடுகளும் ஒவ்வாமைகளும் இருந்த போதிலும், அவர்களை தனது கொள்கைகளுடன் ஒட்டிக்கொண்டிருக்க செய்தது தனித்துவமான ஆளுமையே ஆகும். சமூகம் மற்றும் சமூகங்களுக்கு இடையேயான உறவுகளின் 'ஒன்றிணைக்கும்' அம்சங்களில், அவர்கள் முக்கிய ஈடுபாடு உடையவர்களாக இருந்தார்கள். மேலும் மக்களிடையே 'வேறுபாடு' ஏற்படுத்தும் சாத்தியம் இருப்பதாக அவர்கள் உணர்ந்த அனைத்து விஷயங்களிலும் அதற்கு எதிரான ஒரு அமைதியான போர்வீரராக இருந்தார்கள்.

இலங்கை அரசியல் உண்மையில் சொல்லப் போனால் கல்முனை சார்ந்த பகுதியில் நடைபெறும் அரசியல் மக்கள் மத்தியில் ஆழமான 'காயங்களை'ஏற்படுத்தியது என்ற மாறாத அபிப்பிராயம் அவர்களுக்கு இருந்தது. அதிகாரம் கைவயப்பட்ட அரசியல்வாதிகள் தங்களை அரசியலில் நிலை நிறுத்திக் கொள்ள மக்கள் மத்தியில் ஏற்படுத்தி விடும் பிரிவினைகள் புரையோடிய வடுக்களாக பரிணாமித்து விடுகின்றன. அத்தகைய அரசியல் எந்த விதமான நன்மையையும் எந்தப் பிரிவினருக்கும் ஏற்படுத்துவதில்லை. மாறாக வடுக்களை குணப்படுத்த


ஏ.எல்.ஏ. அஸீஸ்

வேண்டும் என்ற போராட்டத்தில், அவர்களின் பெயரில் மற்றொரு வகையான அரசியல் தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்து விடுகிறது. அதிகாரமிக்கவர்கள் செய்யும் தொகுதி வாரியான பிரித்தாளும் அரசியல், காயங்களை நிரந்தரமாக்குவதற்கும் புரையோடச் செய்வதற்கும் பங்களிப்பு செய்வது பிரித்தாளும் சிந்தனை மேவிய தேசிய அரசியல் சக்திகளுக்கு மிகவும் வரப்பிரசாதமாக அமைந்து விடுகிறது. இதனால் போலும், டாக்டர் ஜெமீல் அவர்கள் விளிம்புநிலை சிந்தனைகள் தேசிய மற்றும் பிரதேச நீரோட்டச் சிந்தனைகளாக உருப்பெற வழி வகுக்கும் அரசியல் அதிகாரப் போக்கை விரும்பாதவர்களாக பிற்காலத்தில் தோன்றியதுண்டு.

இறுதி மூச்சு வரை மக்கள் மத்தியில் வாழ்ந்தவர் மருத்துவர் ஜெமீல் அவர்கள். மக்கள் மருத்துவராக, 'சமூகக் காயங்கள்' அல்லது 'சமூக அவலங்கள்' பற்றி அவருக்கு தெளிவான அறிவு இருந்தது. ஆனால் அவர் விரும்பியபடி அவற்றையெல்லாம் தீர்த்து வைப்பதற்கு தேவையான வசதிகளும் வாய்ப்புக்களும் இருக்கவில்லை. பிற்காலங்களில் சமூக அதிகாரமோ அல்லது அரசியல் பொருளாதார சக்தியோ அவர்களிடம் இருக்கவில்லை. இருந்தாலும் தன்னால் முடிந்ததைச் செய்தார். தான் பிறந்து வளர்ந்த சாய்ந்தமருது மண்ணின் நிலை பேறான அபிவிருத்தி பற்றி அரசியல் கடந்து கருத்தாடல் செய்ததையும் அதற்காக முன்னின்று செயற்பட இளைஞர்களை உற்சாகப் படுத்தியதையும் அவர்களுடைய சமூக ஊடக பரிமாற்றங்கள் சுட்டி நிற்கின்றன.

பிற்காலங்களில், பரந்த பிராந்தியத்திலும், வேறிடங்களிமும் நிகழ்ந்த அரசியல், சமூக நிகழ்வுகளை தவிர்த்து வந்த ஒருவராகவே டாக்டர் ஜெமீல் அவர்களை நோக்கலாம். பிராந்திய அரசியல்வாதிகள் மற்றும் தேசிய அரங்கில் உள்ளவர்கள் பயன்படுத்திய அரசியல் அதிகாரத்தின் 'தீங்கு விளைவிக்கும் தன்மை' (harmmaking nature of political power) மீதான வெறுப்பு, அவரது நிகழ்ச்சி தவிர்ப்பு முடிவுகளில் ஆதிக்கம் செலுத்தியதெனலாம்.

எவ்வாறாயினும், சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜு்ம்மா பள்ளிவாசலின் பரிபாலன சபையானது, சமூகத்திற்கு அவர் ஆற்றிய பல்வேறு பங்களிப்புகளுக்காக, குறிப்பாக 2004 இல் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ எவ்வளவு அர்ப்பணிப்புடனும், தன்னலம் அற்றும் பணியாற்றினார் என்பதை கருத்தில் கொண்டு, அவரை கௌரவித்தது. 2010 முதல், நான் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் என்னுடன் தொடர்ந்தும் தொடர்பில் இருந்தார்கள். வெளிநாடுகளில் நான் சேவையாற்றிய போதெல்லாம், சர்வதேச அமைப்புகளின் மாநாடுகளுக்கு தலைமை தாங்கிய சந்தர்ப்பங்களில் அல்லது ஊடகங்கள் அவற்றைப் பற்றி செய்திகள் வெளியிட்ட சந்தர்பங்களில், என்னை நேரடியாக தொடர்பு கொண்டு ஊக்கமளித்ததை ஒரு போதும் மறக்க முடியாது. அவை அனைத்தும் மிகக் காத்திரமான கருத்தாடல்கள். அவைகளில் சில, தேசத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகள் எவ்வாறு தொடரப்பட வேண்டும், மற்றும் நடுநிலையான அமைதியை அடைவதில் மத மற்றும் சமூகத் தலைவர்கள் என்ன பங்கு வகிக்க வேண்டும் என்பதற்கான அவர்களது எண்ணங்களையும் யோசனைகளையும் பிரதிபலித்தன. அவர்களிடம் நேசத்தை தவிர பேதத்தை கண்டிலேன்.

இளைஞர் வலுவாக்கம் மற்றும் இளைஞர்களின் தலைமைத்துவம் ஆகியவற்றில் குறிப்பிட்ட கவனம் செலுத்தி உள்ளடக்கம் மற்றும் பன்முகத்தன்மை (inclusion and diversity) பற்றிய ஒரு பயிற்சி திட்டத்தை ஏற்பாடு செய்ய ஆர்வமாக இருப்பதாக அவர்களிடம் இருந்து வந்த சில குறுஞ்செய்திகளைப் படிக்கும் போது எனக்குத் தோன்றியது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் அனைத்து சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்களையும் உள்ளடக்கியதாக அத்தகைய பயிற்சி இருக்க வேண்டுமென விரும்பினார்கள். வெளிநாட்டு சேவையில் எனது கடைசி பதவிக் காலம் முடிந்து இலங்கை திரும்பியதும் அதைச் செய்ய முன்வந்தேன். துரதிர்ஷ்டவசமாக கோவிட் 19 தொற்றுநோய் மற்றும் நாடு ஒரே நேரத்தில் நிறைந்த பல நெருக்கடிகள் காரணமாக ஸ்திரம் அற்று போன நிலை என்பன எம்மை அவ்வாறு செயல்பட விடவில்லை.

ஆயினும்கூட, நான் அவர்களுக்கு கடமைப்பட்டிருக்கிறேன்; இறைவன் நாடினால் ஏதோ ஒரு நாளில் குறுகிய அளவிலாவது அத்தகைய நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட வேண்டும். உண்மையில் தற்போதைய பொருளாதார சூழ்நிலை மிகப் பெரிய அளவில் அத்தகு முயற்சியை மேற்கொள்ள அனுமதிக்காது. ஒருவரை ஒருவர் புறந்தள்ளும் தேசிய, பிரதேச கலாச்சாரத்தை (culture of exclusion) புறந்தள்ளி உள்ளடங்கிய பன்முகத்தன்மை நிறைந்த, விளிம்பு நிலை கடந்து பிரதான நீரோட்டத்தில் இணையக் கூடியதும் அதற்குப் பங்களிப்பு செய்யக்கூடியதுமான சமூகக் கட்டமைப்புகள் ஏற்படுத்தப் பட வேண்டும். அதன் அர்த்தம் சமூக கலாச்சாரத்தை கைவிடுதல் என்பதல்ல. புறத்தொதுக்கும் அரசியல் கலாச்சாரத்தையும் அது உருவாக்கியுள்ள சமூக பரிமாணங்களையும் செயலிழக்கச் செய்தல் என்பதே கருத்தில் கொள்ளப் பட வேண்டியது.

இலங்கையை பொறுத்தவரை இது ஒற்றைவழிப் பாதையல்ல. புறந்தள்ளும் தேசிய அரசியல் கலாச்சாரமும் சம நேரத்தில் மாற்றம் அடைய வேண்டியுள்ளது. இங்கு தான் இளைஞர்கள் மிகப் பெரும் பங்களிப்பு செய்யக் கூடியவர்களாக உள்ளார்கள். இந்த உணர்தல் தான் இளைஞர்களுக்கான பயிற்சியின் தேவையை அவசியமாக்குகிறது. எதிர்கால சமூக, அரசியல் தலைவர்களும் பொருளாதார தொழில் துறை முன்னோடிகளும் இத்தகைய புலத்திலிருந்து தான் உருவாக்க வேண்டும்.

ஆக, உள்ளடங்கிய பன்முகத்தன்மை நிறைந்த இளைஞர் சமுதாயமே அரசியல் ரீதியானதும் வேறு விதமானதுமான பிரிவு மனச்சார்புகளை கடந்து செல்லவும் செயல் இழக்கவும் தகுமானது. ஜெமீல் அவர்கள் விரும்பாத 'அரசியல் அதிகாரம்' இன்னும் அவர்களை ஒதுக்கி வைக்க முயற்சித்தாலும் மக்களை ஒன்றிணைக்க உதவும் ஒரு முன்னோடிக் கலாச்சாரத்துக்கு அது நிச்சயம் வழிகோலும். எல்லாம் வல்ல இறைவன் தனது அடியானுக்கு ஜென்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கத்தை வழங்குவானாக!

**நூருல் ஹுதா உமர்**




# பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய சாதனை மாணவர்களுக்கு மட்டக்களப்பு வர்த்தகர் சங்கத்தினால் அதியுயர் கௌரவம்

**(கல்லடி - சுதா)**

மட்டக்களப்பு வர்த்தகர்கள் சங்கம் நடாத்தும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் 2021 வருடத்தில் உயர் பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கான விசேட கௌரவிப்பு விழா மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் விடுதியில் மிகப்பிரமாண்டமான முறையில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு வர்த்தக சங்க தலைவரும் சமூக சேவையாளருமான தேச பந்து முத்துலிங்கம் செல்வராஜா தலைமையில் இடம்பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் குறித்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திசாநாயக்க மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், மாணவர்களுக்கான கௌரவிப்பினையும் வழங்கி வைத்துள்ளனர்.

பாரம்பரிய மங்கள வாத்திய இசை முழங்க அதிதிகள் மலர் மாலைகள் அணிவித்து வரவேற்கப்பட்டமையினை தொடர்ந்து, வரவேற்புரை, வரவேற்பு நடனம், தலைமையுரை, அதிதிகளின் விசேட உரைகள் இடம்பெற்று, கடந்த வருடம் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள 163 மாணவர்களுக்கு இதன்போது பொன்னாடை போர்த்தி பதக்கங்கள் அணிவித்து நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், தேசிய ரீதியில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான துறையில் அகில இலங்கை ரீதியில் முதலாவது இடத்தை பெற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த மட்டக்களப்பு புனித மிக்கேல். கல்லூ ரி தேசிய பாடசாலையின் மாணவன் தமிழ்வாணன் துவாரகேஷ், பௌதிக விஞ்ஞான துறையில் அகில இலங்கை மட்டத்தில் நான்காவது இடத்தையும் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் சாதித்த செங்கலடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் மாணவன் லோகிதன் கிசோபன் மற்றும் கதிரவெளி விக்னேஸ்வரா மாணவன் எஸ். டினுகரன் ஆகியோர் இதன்போது விசேட நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

நிகழ்விற்கு அதிதிகளாக கலந்துகொண்டவர்களை வர்த்தகர்கள் சங்கத்தினர் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், இச்சிறப்பான சாதனை மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வினை திறம்பட நிகழ்துவதற்கு காரணகர்த்தாவாக இருந்த மட்டக்களப்பு வர்த்தக சங்க தலைவரும் சமூக சேவையாளருமான தேச பந்து எம்.செல்வராஜாவை வர்த்தக சங்கத்தினர் பொன்னாடை பேர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





குறித்த நிகழ்விற்கு கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி.என். புள்ளைநாயகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வள்ளிபுரம் கனகசிங்கம், மட்டக்களப்பு மாநகர மேயர் தியாகராஜா சரவணபவன் ஆகியோர் கலந்துகொண்டதுடன், விசேட அதிதிகளாக மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.சுஜாதா குலேந்திரகுமார், மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.அகிலா கனகசூரியம், கல்குடா வலயக்கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி, மட்டக்களப்பு மத்தி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.எஸ். உமர் மௌலானா மற்றும் பட்டிருப்பு வலயக்கல்விப் பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்) செபமாலை மகேந்திரகுமார், பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜீ.சுகுணன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கே.கலாரஞ்ஜனி, கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் திருமதி. புளோரன்ஸ் பாரதி கெனடி, பிரதேச செயலாளர் யூ.உதயஸ்ரீதர் ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன்,
அதிபர்கள், ஆசிரியர்கள், சாதனை படைத்த மாணவர்களின் பெற்றோர், சமூக ஆர்வலர்கள், துறைசார் திணைக்கள உயரதிகாரிகள் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் என 500 இற்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## பிரிவெனா கல்வி தொடர்பில் கலந்துரையாடல்



**ஹஸ்பர்**

கிழக்கு மாகாண பிரிவேனா விழா திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் பிரிவேனா இராஜாங்க அமைச்சர் விஜித பெய்ருகொட தலைமையில் அண்மையில் நடைபெற்றது. "ஒரு பலனளிக்கும் உற்பத்தித்திறன்" என்ற தொனிப்பொருளின் கீழ் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள பல விடயங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. புதிய பிரிவேனா மதிப்பீட்டு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் பிரிவேனில் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இதன்படி, கிழக்கு மாகாணத்தில் பிரிவேனா உற்பத்தித் தரச் சுட்டெண்ணை இலக்காகக் கொண்டு 29 பிரிவேனாக்கள் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டன. இம்மாகாணத்தில் உள்ள பிரிவேனா மற்றும் தம்ம பாடசாலைகள் பல கடினமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து பிள்ளைகளுக்கு பிரிவெனா கல்வியை வழங்குவதற்கும் பிக்குகளின் கல்விக்காகவும் கடுமையாக உழைத்து வருகின்றன. இந்த செயல்முறையின் படி, 80 புள்ளிகளுக்கு மேல் சிறந்த பிரிவில் அந்த தரத்தைப் பெற்ற ஒரு மாணவர் இருந்தார். அதுமட்டுமன்றி 70ஸ்ரீ79 புள்ளிகள் கொண்ட இரண்டு பிரிவேனாக்களும் மாகாணத்திலிருந்து மிகச் சிறந்த மட்டத்தில் இருப்பது விசேட அம்சமாகும்.

# போரதீவுப்பற்று பிரதேச செயலகம் முதலாம் இடம்



**ரக்ஸனா)**

2021 ஆம் ஆண்டுக்கான தேசிய விருது மாகாண மட்டத்தில் போரதீவுப் பற்றுக்கு முதலாம்இடம். மேற்படி விருது வழங்கும் நிகழ்வு 30.09.2022 ஆம் திகதி சமூகப் பாதுகாப்பு சபையின் ஏற்பாட்டில் திருகோணமலை **JKAB Beach resort** மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில். மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்று பிரதேச செயலகம் 2021இற்கான தேசிய விருதினைப் பெற்றுக்கொண்டது. ஓய்வூதிய உரித்தற்ற பொது மக்களுக்கு 60 வயதின் பின் ஓய்வூதியம் ஒன்றினை கிடைக்கச் செய்யும் சமூக வேலைத் திட்டம். இத்தகைய வேலைத்திட்டம் பொதுமக்களை சென்றடைய வழிகாட்டல்களும், இலக்குகளும் தனித்தனியாக வகுக்கப்பட்டது. அதனை நேர்ச்சிந்தனையுடன் புரிந்து கொண்டு செயற்பட்ட கிராம உத்தியோகத்தர்கள், துறைசார் வெளிக்கள உத்தியோகத்தர்கள், திட்டமிடல் வெளிக்கள உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்றோரின் விடாமுயற்சியே இவ்விருதுக்கு முக்கிய காரணம். தற்போது மக்கள் அதன் பலாபலனை அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர். அவ்உத்தியோகத்தர்களுக்கு இவ் விருதினை சமர்ப்பிப்பதில் போரதீவுப்பற்று பிரதேச செயலகம் பெருமை கொள்வதாகத் தெரிவித்துள்ளது. அந்த வகையில் போதீவுப் பற்று பிரதேச செ யலகம் 2021 ஆம் ஆண்டுக்கான தேசிய விருதில், அகில இலங்கை ரீதியாக 5ஆம் இடத்தையும், மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தையும், பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

**(ரக்ஸனா)**

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை உறுப்பினர் த.சுதாகரன் அவர்கள் கோட்டை கல்லாறு கிராமத்தில் அமைந்துள்ள சக்தி பாலர் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களை திங்கட்கிழமை (03) வழங்கி வைத்தார். இதன்போது சிறுவர்களுக்கு சிறுவர் தின வாழ்த்துக்களை தெரிவித்த அவர், அவரது சொந்த நிதியிலிருந்தே குறித்த கோட்டை கல்லாறு சக்தி பாலர் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களையும் இனிப்பு வண்ணங்களையும் குறித்த பாலர் பாடசாலைக்கு நேரடியாக சென்று சிறார்களுக்கு வழங்கி வைத்துள்ளார்.



## பாராளுமன்ற தவிசாளர் குழுவிற்கு இருநாள் செயலமர்வு





**த.சுபேசன்**

பாராளுமன்ற தவிசாளர் குழுவினருக்கான இருநாள் செயலமர்வு கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்கள் காலி மாவட்டத்தில் இடம்பெற்றிருந்தது. தேசிய ஜனநாயக நிறுவனத்துடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட குறித்த செயலமர்வின் போது, பாராளுமன்ற செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்ளும் விதமாக பல்வேறு தரப்பட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாகாண பிரதம செயலாளராக ரத்நாயக்க கடமையை பொறுப்பேற்றார்



**ஹஸ்பர்**

கிழக்கு மாகாண புதிய பிரதமச் செயலாளராக எஸ் .ரத்நாயக்க நேற்று (03) திருகோணமலையில் உள்ள அலுவலகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றார். முன்னர் பிரதம செயலாளராக கடமையாற்றிய துசித பி.வனிகசிங்க ஓய்வு பெற்ற பின்னர் இருந்த பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டார். ரத்நாயக்க பிரதம செயலாளர் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராகவும் பணியாற்றினார்.

நிர்வாக சேவையில் 27 ஆண்டுகளாக பல்வேறு பதவிகளை வகித்த திரு. ரத்நாயக்க, கந்தகெட்டிய, ஹகுரன்கெத்த, மத்திய மாகாண சபையின் பிரதி பிரதம செயலாளர், விவசாய அமைச்சின் செயலாளர் மற்றும் அதே மாகாண பிரதம அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

## மக்கள் பங்கேற்புடனான பாதீடு



**பொன்ஆனந்தம்**

எமது வெருகல் பிரதேச சபையின் வருமானம் ஆளணி பற்றாக்குறை காரணமாக மக்கள் எதிர்பாரகும் பபணிகளை செய்ய முடியாதுள்ளது. என வெருகல் பிரதேச சபையின் தவிசாளர் தே. விஜயகுமார் தெரிவித்தார். இன்று சபையின் 2023 ஆண்டிற்கான மக்கள் பங்குபற்றலுடனானபாதீடு தயாரித்தல் செயலமர்வு இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இங்கு கருத்துவெளியிடும்போதே அவர் இதனை தெரிவித்தார். சபைகளின் பாதீடு தயாரிப்பில் மக்களின் பங்குபற்றுதலை அவசியமானது. அதிகமான சபைகளில் மக்களது பங்களிப்பு பெறப்படுவதில்லை. சபைகளுக்கும் மக்களுக்குமிடையிலான பாரிய இடைவெளி காணப்படுகின்றன. இதனை நிவர்த்திக்கு வகையில் மக்களது பங்களிப்பைவலியுறுத்தும் வகையில் இந்த செயலமர்வு ஆசிய மன்றத்தின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டது. முதன்முறையாக பெண்கள், இளைஞர்கள் அடங்கலாக 75பேர்வரை பங்கு பற்றி எதிர்கால திட்டங்கள் குழுவாக ஆராய்ந்து சபையிடம் சமர்பிக்கப்பட்டதுடன் பாதீடு ம் தயாரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இங்கு பிரதேச சபை உறுப்பினர்கள், இளைஞர் கள், பெண்கள், சபை அதிகாரிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. எதிர்காலத்தில் இந்நடமுறையை பின்பற்ற வேண்டும். எனவும் வலியுறுத்தப்பட்டது. இந்நிகழ்வு இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பின் இணைப்பாளர் பொ. சற்சிவானந்தம் தலைமையில் இடம்பெற்றது. இங்கு பாதீடு பற்றிய தெளிவை வளவாளர் அன்பழகன் குரூஸ் தெளிவு படுத்தினார்.



காரைதீவு விபுலானந்தா மொன்டிசோரி முன்பள்ளி பாடசாலையின் வருடாந்த நாமகள் ஊர்வலம் இன்று (4) செவ்வாய்க்கிழமை சிறார்கள் பெற்றோர் சகிதம் நடைபெற்ற போது... **(படங்கள் .காரைதீவு சகா)**

# புத்தகங்கள் வழங்கி வைப்பு



**தலவாக்கலை பி.கேதீஸ்**

காமராஜரின் 47 வது நினைவு தினைத்தை முன்னிட்டு இலங்கை நாடார் நலன்புரி சங்கத்தினூடாக தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலைக்கு ஒரு தொகை புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.பாடசாலையின் ஆசிரியை தேவரஞ்சனி ஊடாக இந்த புத்தகங்கள் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டன. இதன்போது பாடசாலை அதிபர் எம். ஐ.எம்.பாரிஸ் , பிரதி அதிபர் விஜயசுந்தரம் மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள் கலந்துக்கொண்டனர்.

# நுவரெலியா மாவட்டத்தில் ஒருவர் உயிரிழப்பு
# மூன்று குடியிருப்புகள் சேதம்

**தலவாக்கலை பி.கேதீஸ்**

கடும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மூன்று குடியிருப்புகள் பகுதியளவில் சேதமடைந்ததால் அங்கு வாழ்ந்த 8 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தெரிவித்தார். திம்புளை பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மவுண்ட்வேர்ணன் மேற்பிரிவு தோட்டத்தில் நேற்று முன் தினம் (3) அதிகாலை பெய்த கடும் மழையினால் தனி குடியிருப்புக்கு பின்னால் இருந்த பாரிய மண்மேடொன்று சரிந்து வீட்டின் கூரையின் மீது விழுந்துள்ளது. இதன்போது சமையலறையில் காலை தனது மகளுடன் சமையல் வேலை செய்துக்கொண்டிருந்த தாயின் மீது விழுந்ததில் அவர் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் பத்தனை மவுண்ட்வேர்ணன் மேற்பிரிவைச் சேர்ந்த ராமசாமி காளியம்மா (வயது 46) என்ற மூன்று பிள்ளைகளின் தாய் என அடையாளம் காணப்பட்டார். நுவரெலியா மற்றும் கொத்மலை பிரதேச செயலகப் பிரிவுகளில் சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குவதற்கு தேவையான பணிகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட மேலும் தெரிவித்தார்.

# திருமலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற வாணி விழா நிகழ்வு



**ரவ்பீக் பாயிஸ்**

திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வாணி விழா நிகழ்வுகள் இன்று (04) மாவட்ட செயலகத்தில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பூஜை வழிபாடுகளை திருகோணமலை இரத்தினசிங்க பிள்ளையார் ஆலயத்தின் பிரதம குரு பாலகிருஷ்ண குருக்கள் நிகழ்த்தினார்.

சரஸ்வதி பூஜை வழிபாடுகளை மாவட்ட செயலகத்தில் சிறப்பாக நடாத்த நடவடிக்கை எடுத்தமைக்காக ஏற்பாட்டுக்குழுவினருக்கு நன்றிகளை தெரிவிப்பதாக இதன்போது அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தெரிவித்தார். இப்பூஜை வழிபாடுகள் வட கிழக்கு மாகாணத்திற்கு புறம்பாக வேறு பிரதேசங்களிலும் நடைபெற்று வருகின்றன. இந்துக்களின் மிகப்பிரதான சமய நிகழ்வுகளுள் ஒன்றாக இப்பூஜை காணப்படுகின்றது. இப்பூஜை வழிபாடுகள் மூலம் வேண்டப்படும் விடயங்கள் மக்கள் வாழ்விலும் நாட்டுக்கும் நலனாய் அமைய வேண்டுவதாக இதன்போது அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

வரவேற்பு நடனம் உட்பட பல நிகழ்வுகள் இங்கு அரங்கேற்றப்பட்டன. திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் மற்றும் திருகோணமலை சிங்கள மகா வித்தியாலய மாணவிகள் இவ்வரவேற்பு நடனங்களை நிகழ்த்தினர். நடனங்களில் கலந்து கொண்ட மாணவிகளுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எஸ்.பரமேஸ்வரன், கிளைத்தலைவர்கள் உட்பட சக உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊக்குவிப்பு நிதியும் வீட்டுத் தோட்ட விதைகளும் வழங்கி வைப்பு



**(ரக்ஸனா)**

காத்தான்குடி மற்றும் மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பெண்கள் தலைமை தாங்கும் 70 குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம்ரூபாய் ஊக்குவிப்பு நிதியும் வீட்டுத் தோட்ட விதைகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அனீஸ ா பிர்தௌஸ் தெரிவித்தார். மேற்படி நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் திங்களன்று 03.10.2022 இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வைத் துவக்கி வைத்து உரையாற்றிய நிறைவேற்றுப் பணிப்பாளர் அனீஸா, ஐவெயார் நிறுவனம் காலத்துக்குக் காலம் இப்பிரதேசத்திலுள்ள நலிவுற்ற, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் தேவைகளை அறிந்து உதவிகளை வழங்கி வருகின்றது. அந்த வகையில் நாட்டின் பொருளாதார ஸ்திரத் தன்மை இன்மை காரணமாக பொருளாதார ரீதியில் நெருக்கடியைச் சந்தித்து ஜீவனோபாயத்திற்கு சிரமப்படும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உதவுவதற்காக இந்தத் திட்டம் அமுலாக்கப்படுகிறது.

பெண்களும் கற்பிணித் தாய்மாரும் குழந்தைகளும் போசாக்கில்லாத நிலைமையை எதிர்கொள்கின்றனர். மந்தபோசனையுடைய குழந்தைகள் பிறக்கின்றன. இன்னுமின்னும் போசாக்கற்ற குழந்தைகள் பிறப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அந்த அடிப்படையிலே பெண்களுடைய ஆரோக்கியத்தையும் அவர்களுடைய போசாக்குத் தேவையையும் நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு நம் எல்லோருக்கும் உண்டு.

அதனாலேயே நஞ்சற்ற உணவு, சுய சார்புப் பொருளாதாரம் என்ற அடிப்படையில் இந்த வேலைத் திட்டத்தைத் தொடங்கியிருக்கின்றோம்.

உணவுப் பொதிகள் வழங்குவதில் தொடங்கிய நமது பணி இப்பொழுது சுயமாக, அவர்களாகவே உற்பத்தி செய்து தங்களது போசாக்கையும் பொருளாதாரத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்ற அளவுக்கு திட்டம் வகுத்துச் செயற்படுகின்றோம். ஆசிய மன்றத்தின் அனுசரணையுடன் இது அமுலாக்கப்படுகின்றது. ஆசிய மன்றம் இலங்கையில் 15 மாவட்டங்களைத் தெரிவு செய்து வீட்டுத் தோட்டங்கள், சுய உணவுப் பயிர்ச்செய்கை உள்ளிட்ட விடயங்களில் பெண்களை வலுவூட்டுகின்ற திட்டங்களை அமுலாக்கி வருகின்றது. காத்தான்குடியில் இடநெருக்கடி காரணமாக அவஸ்தைப்படும் நிலைமை இருந்தபோதிலும் நவீன சிந்தனையோட்டத்தில் இட நெருக்கடி உள்ள இடங்களிலும் விவசாயத்தை மேற்கொள்ளலாம் என்ற மாற்றுத் திட்டம் நீரூபிக்கப்பட்டுள்ளது. அதனையே நாம் இங்கு தொடங்கவுள்ளோம். பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் 70 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபாவும் பயிர் விதைகளும் வழங்கப்பட்டன. இவர்களுக்கு ஏற்கெனவே, எவ்வாறு வீட்டுத் தோட்டச் செய்கை மேற்கொள்வது வன்பது பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன."

இந்நிகழ்வில் காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ. உதயஸ்ரீதர், மண்முனைப்பற்று பிரதேச செயலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் மனோரஞ்சினி ஜெயச்சந்திரன், காத்தான்குடி விவசாயப் போதனாசிரியை முபீதா றமீஸ் உட்பட காத்தான்குடி ஆரையம்பதி கிராம அலுவலர்களும் ஐவெயார் நிறுவன அலுவலர்களும் பயனாளிகளும் பங்கு பற்றினர்.

# நவீன சீதை சிறுகதை நூல் வெளியீடு





கவிச்சுடர் சிவரமணியின் நவீன சீதை சிறுகதை நூல் வெளியீட்டு விழா 03.10.2022 திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு திருகோணமலை நகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதன் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வின் அதிதிகளாக பேராசிரியர் பாலசுகுமார், திருகோணமலை வலயக்கல்விப்பணிப்பாளர் சி. சிறிதரன், அரசியல் ஆய்வாளர் ஆ. யதீந்திரா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நூலின் பிரதியினை நூலாசிரியர் கவிச்சுடர் சிவரமணி கிழக்கு மாகாண இலங்கை வங்கியின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் ந.து.ரகுராம் அவர்களுக்கு வழங்கி வெளியீட்டு வைப்பதையும், அதிதிகளுக்கு நூலாசிரியராலும் நிகழ்வின் தலைமையினாலும் வழங்கி வைக்கப்படுவதையும், நூலின் அறிமுக உரை, நயவுரையினை கவிஞர் க. யோகானந்தன் ஆசிரியை சௌ. சந்திரகலா ஆகியோர் வழங்குவதையும், வரவேற்புரையை ஊடகவியலாளர் பா. விபூஷிதன், நிகழ்ச்சி தொகுப்பை ஊடகவியலாளர் முகமட் புகாரி யும், நன்றியுரையை நூலகர் க . வரதகுமார் ஆகியோர் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தவர்களையும் காணலாம்.

# ஆங்கிலப் பெருவிழா



**(எம்.ஏ.றமீஸ்)**

அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஆங்கில பெரு விழா இன்று(04) கல்லூரி வளாகத்தில் அதிபர் ஏ.பி.முஜீன் தலைமையில் இடம்பெற்றது. மாணவர்களின் ஆங்கிலப் புலமையினை விருத்தி செய்யும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வின்போது பல்வேறு கலை கலாசாரப் பாரம்பரிய விடயங்கள் அடங்கிய கூடங்கள் பார்வைக்காய் வடிவமைக்கப்பட்டிருந்தன. ஆங்கில மொழி மூல கலந்துரையாடல்கள், பொருட்களின் விற்பனைக் கூடங்கள், நூலக விற்பனைக் கூடங்கள், வினாவிடை புதிர்க் கூடம், இன நல்லுறவினை ஏற்படுத்தும் பல்லின சமூக ஒற்றுமைக் கூடம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை ஒன்றிணைத்து காட்சிக் கூடங்கள் தயார் படுத்தப்பட்டிருந்தன.

இதுதவிர, பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட பல்வேறு ஆங்கில மொழி மூல போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், ஆங்கில பெருவிழாவின் போது திறமை காட்டி செயற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இதன்போது பாராட்டி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்–ஷேய்ஹ் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.சித்தி பாத்திமா, உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.நௌபர்டீன்,கோட்டக் கல்வி அதிகாரி எம்.ஐ.எம்.உவைஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் அதிதிகளாய் கலந்து கொண்டனர்.

# திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் கேதார கௌரி விரதம்

**!(அ . அச்சுதன்)**

ஆதிகாலம் முதல் விரதங்களிலே மிகச் சிறந்த விரதமாக ஆண்றோர்களால் அனுஷ்டிக்கப்பட்டு நற்பலன் அளித்து வருவது கேதார கௌரி விரதமே ஆகும். இந்த விரதம் இலங்கையில் திருகோணமலை அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில்தான் மிகவும் கூடுதலான பக்தர்கள் இவ்விரதத்தை அனுஷ்டிக்கின்றனர்.

05 -10- 2022 புதன்கிழமை இவ் விரதம் ஆரம்பித்து 25 -10-2022 செவ்வாய்க்கிழமை கூடிய அமாவாசைத் தினத்தன்று நிறைவு பெறுகின்றது.

இருபத்தொரு நாள் விரதமனுஷ்டிக்க விரும்பும் அடியார்கள் ஆரம்ப தினத்தன்று சங்கற்பம் செய்து தினமும் ஆலய தரிசனம் பண்ணி இறுதி நாளன்று உபவாசமிருந்து திருக்காப்பை அணித்து கொள்ளலாம். இருபத்தொரு நாளும் விரதமனுஷ்டிக்க இயலாதவர்கள் விரத இறுதி நாளாகிய 25-10-2022 அன்று உபவாசமிருந்து நோன்புக்கயிற்றை அனிந்து கொள்ளலாம் என ஆலயத்தின் ஆதினகர்த்தாவும் பிரதமகுருவும் ஆகிய பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்கள் தெரிவித்தார்.



# சமூகத்தின் விருப்பத்தின் மூலம் ஒரு சுதந்திர நாடு

"சமூகத்தின் விருப்பத்தின் மூலம் ஒரு சுதந்திர நாடு" என்ற தொனிப்பொருளின் அடிப்படையில் தேசிய போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்கான சர்வதேச நிதானம் நாள் நிகழ்ச்சி ஸ்ரீ தலதா மாளிகையின் பல்நோக்கு கட்டிடத்தின் விரிவுரை மண்டபத்தில் . 03.10.2022 அன்று பிற்பகல் 03:00 மணிக்கு கண்டி. 2.00 மணி முதல் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஷ்யாமோபாலி மஹா நிகாயாவின் அஸ்கிரி மகா விகாரையின் வணக்கத்திற்குரிய வேடருவே தர்மகீர்த்தி ஸ்ரீ ரதனபால உபாலி அபிதான அனுநாயக்க தேரர், வணக்கத்துக்குரிய நியங்கொட தர்ம கீர்த்தி ஸ்ரீ சங்கரக்கித விஜித சிறி அபிதான அனுநாயக்க, ஷ்யாமோபாலி மஹா நிகாய தேசிய மல்வத்து மகா விகாரை மல்வத்து மகா விகாரையில் கலந்துகொண்டார். வணக்கத்திற்குரிய தெனகம தம்மாராம தேரர் மற்றும் சமயமற்ற மதகுருமார்கள், கண்டி ஆளுநர் சந்தன தென்னகோன், மேலதிக ஆளுநர் உத்பல ஜயரத்ன, மத்திய மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஹிந்த திஸாநாயக்க, மற்றும் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.



இந்த நிகழ்ச்சியின் பிரதான உரையை தேசிய போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கை பிரிவு ஒருங்கிணைப்பு அதிகாரி, இலங்கை நிதான மகா சபையின் உப தலைவர், விரிவுரையாளர் தேஷ்பந்து நளின் அமரசிங்க மற்றும் லாமா மற்றும் மகளிர் விவகார அமைச்சின் சிரேஷ்ட ஆலோசனை அதிகாரி விரிவுரையாளர் துஷாரி சந்திரசேகர ஆகியோர் ஆற்றினர். முப்படைகளின் பிரதிநிதிகள், சிறிலங்கா பொலிஸ், சிவில் பாதுகாப்பு திணைக்களம், கலால் திணைக்களம், தேசிய ஆபத்தான போதைப்பொருள் கட்டுப்பாட்டு சபை ஆகியன இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டன. இந்த ஆண்டு உட்கொள்ளும் மதுபான அளவை விட, அடுத்த வருடம் மதுவிலக்கு தின நிகழ்ச்சி நடைபெறும் போது, தனிநபர்கள் உட்கொள்ளும் லீற்றர் அளவைக் குறைக்கும் அர்ப்பணிப்புடன் பொது மனப்பான்மையை மாற்ற அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என திரு.நளின் அமரசிங்க தனது உரையில் குறிப்பிட்டார். இவ்வருடம் ஜூன் மாதத்திற்குள் மாத்திரம் சுமார் 120 மில்லியன் லீற்றர் மது பாவனையானது இந்நாட்டின் துரதிஷ்டமான நிலை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ள திரு.பிரதீப் திலங்க தேலா மேலும் குறிப்பிடுகையில், தலதா மாளிகை வளாகத்தில் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வாய்ப்பு கிடைத்தமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

# பரீட்சை பெறுபேறுகளை அதிகரிக்கும் நோக்கில் கருத்தரங்கு

**( வாஸ் கூஞ்ஞ)**

வங்காலை மன். புனித ஆனாள் ஆரம்ப பாடசாலை ஐந்தாம் தர மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகளை அதிகரிக்கும் நோக்கில் இவ் மாணவர்களுக்கு பரீட்சைக்கான முன்னோடி கருத்தரங்கு இடம்பெற்றது. சனிக்கிழமை (01.10.2022) காலையில் வங்காலையில் மன். புனித ஆனாள் ஆரம்ப பாடசாலையில் பாடசாலை அதிபர் அருட்சகோதரி எஸ்.றொசாந்தி அவர்களின் ஒழுங்கமைப்பில் மன்.புனித ஆனாள் தேசிய கல்லூரியின் 1997 ம் ஆண்டு கல்வி பொது தராதர சாதாரண தர பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்பில் இவ் நிகழ்வு இடம்பெற்றது.

இக்கருத்தமர்வானது பாடசாலை மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகளை அதிகரிக்கும் நோக்கத்தை கருத்தில் கொண்டும் இவ் மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் முகமாகவும் இவ் கருத்தமர்வு இடம்பெறுகின்றது எனவும் இந்த இரு மாத காலங்களில் ஒவ்வொரு கிழமையும் விசேட கருத்தமர்வுகளும் பரீட்சைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மட்டில் மிகவும் அக்கறையோடு செயற்பட்டு பிள்ளைகளை நேர காலத்தோடு வகுப்பிற்கு அனுப்பி வைக்கவும்

# தொழிலாளர்களை வீதிக்கு இறக்காமல் போராடி வெற்றி கண்டோம்



**தலவாக்கலை பி.கேதீஸ்**

தொழிலாளர்களை வீதிக்கு இறக்காமல் கோஷங்கள் எழுப்பி போராட்டங்கள் செய்யாமல்,தோட்ட நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நுட்பமானதொரு முறையில் போராட்டத்தினை முன்னெடுத்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அதில் வெற்றி கண்டது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில், பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதனம் தொடர்பான ஒரு போராட்டத்திற்கு வெற்றி கிட்டிய போதிலும் மஸ்கெலியா கம்பனி நிர்வாகத்தின் கீழுள்ள பெருந்தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு வேதனம் தொடர்பான பிரச்சினைகள் எழுந்தன. இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நுட்பமான வழிகளில் காய்களை நகர்த்தியது. அதன்படி குறித்த கம்பனி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் தோட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்டு கொழும்பு கொண்டு செல்ல தயார் நிலையிலிருந்த தேயிலைத்தூள் பெட்டிகளை அத்தோட்டங்களிலிருந்து கொண்டு செல்லும் பணிகளை நிறுத்தி வைக்கும் செயற்பாடுகளில் தொழிலாளர்கள் அமைதியாக ஈடுப்பட்டனர். தொழிலாளர்கள் இவ்விடயத்தில் எவ்வாறு நடந்துக்கொள்ள வேண்டும் என இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான்,பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான்,தவிசாளர் மருதபாண்டி ரமேஸ்வரன் ஆகிய என்னால் மாவட்ட பிரதிநிதிகள்,தோட்ட கமிட்டி தலைவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. மேலும் நான் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான கணபதி கனகராஜ், பி.சக்திவேல், பிலிப்குமார் ஆகியோருடன் குறித்த தோட்டங்களுக்கு நேரடியாகச் சென்று தொழிலாளர்களுடன் உரையாடி போராட்டம் குறித்து அறிவுறுத்தியிருந்தேன். தேயிலைத்தூளை விற்பனைக்கு கொண்டு செல்ல முடியாமல் தடுமாறிய கம்பனியானது இறுதியில் இ.தொ.காவுடன் பேச்சுவார்த்தைக்கு இணங்கியது. இறுதியில் நாம் முன்வைத்த தொழிலாளர்களின் 16 கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக எமக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளமை எமது போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகும். ஆகவே கால மாற்றத்துக்கேற்பவும் கம்பனிகளின் நிலைமைகள் அறிந்தும் சூட்சுமமான முறையிலேயே போராட்டங்களை நடாத்த வேண்டும். இது கம்பனிக்கு எதிரான ஒரு போராட்டம் இங்கு வன்முறை வேண்டாம். இந்த போராட்டத்தை அமைதியான வழியில் நாம் முன்னெடுத்தமையினாலேயே இதில் வெற்றி கண்டோம் என்றார்.

# மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் மாகாணமட்டத்தில் தென்மோடியில் முதலிடம் வடமோடியில் இரண்டாம் இடம்

கிழக்கு மாகாண மட்ட தமிழ்மொழித்தினப்போட்டியில், ஆக்கத்திறன் தவிர்ந்த ஏனைய போட்டிகளிலும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய மாணவர்கள் போட்டியிட்டு ஒரு முதலாம் இடத்தையும், ஓர் இரண்டாம் இடத்தையும் இரண்டு மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளனர். குறித்த வலயத்திற்குட்பட்ட கன்னன்குடா மகா வித்தியாலயமே தென்மோடிக்கூத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளதுடன், முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலயம் வடமோடிக்கூத்தில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மூன்றாம் இடங்களை தனிநடிப்பு, தமிழறிவு போட்டிகளில் பங்கேற்ற மாணவர்கள் பெற்றிருக்கின்றனர்.



# போதைப்பொருள் விற்பனை செய்கின்றவர்களுக்கு எதிராக தகுந்த நடவடிக்கை அதிகாரிகளால் எடுக்கப்படுவதில்லை




போதைப்பொருள் விற்பனை செய்கின்றவர்களுக்கு எதிராக தகுந்த நடவடிக்கை சம்மந்தப்பட்ட அதிகாரிகளால் எடுக்கப்படுவதில்லை என கண்டித்து ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சகல பாடசாலைகளிலும் கவனயீர்ப்பு போராட்டம் திங்கட்கிழமை(3) நடைபெற்றது. இப்போராட்டத்தில் மாணவர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கம் சமூக நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

சிறுவர் தினத்திற்கு இணையாக இடம்பெற்ற இக்கவனயீர்ப்பு போராட்டத்தில் போதைப்பொருளை இல்லாதொழிக்க வேண்டியும் அதை விநியோகம் செய்கின்றவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தியும் மாணவர்களும் பெற்றோர்களும் பல்வேறு வாசகங்களை ஏந்திய சுலோக அட்டைகளை தாங்கி நின்றனர். அத்தோடு கோசங்களை எழுப்பியவாறும் பாடசாலைக்கு முன்பாக ஒன்றுகூடி தமது எதிர்ப்பினை வெளியிட்டனர்.

கடந்த சில காலமாக போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுகின்றவர்கள் மாணவர்களை இலக்கு வைத்து பாடசாலைகளில் போதைப்பொருளை விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றிலும் வழக்குகள் தொடரப்பட்டன. இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனிநபர் ஒருவர் பாடசாலைக்குள் அத்துமீறி நுழைந்து ஆசிரியர்களை அச்சுறுத்தியதாக தெரிவிக்கப்பட்டு 15 ஆசிரியர்கள் இணைந்து கையொப்பமிட்டு அக்கரைப்பற்று பொலிசாரிடம் ஒப்படைத்திருந்தனர். ஆனாலும் அவ்விடயம் தொடர்பில் உரிய நபர் கைது செய்யப்படாது உரிய நபரை பாதுகாக்கும் பொருட்டு பல்வேறு அழுத்தங்கள் ஆசிரியர்கள் மீது பிரயோகிக்கப்பட்டதாகவும் இதனை அடிப்படையாக வைத்து பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தி ஆசிரியர்களிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இதனால் தங்களுக்கு பாதுகாப்பில்லை என்பதுடன் மாணவர்களும் உளரீதியாக பாதிக்கப்பட்டதாக கூறப்பட்டது. இதனை அடிப்படையாக வைத்தே இன்று ஆலையடிவேம்பு பிரதேசத்தில் உள்ள அனைத்து பாடாசாலைகளிலும் இக்கவனயீர்ப்பு முன்னெடுக்கப்பட்டதுடன் அவ்விடத்திற்கு சென்ற ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் மற்றும் திருக்கோவில் வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்விப்பணிப்பாளர் கீ.கமலமோகனதாசன் ஆகியோரிடமும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன. இங்கு போதைப்பொருளுக்கு எதிரான வீதி நாடகமொன்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதேநேரம் இன்று சம்மந்தப்பட்ட நபர் அக்கரைப்பற்று பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலகத்தில் வாணி விழா



**பைஷல் இஸ்மாயில் -**

கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வாணி விழா நிகழ்வு (03) மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மூ.கோபாலரத்தினம் தலைமையில் இடம்பெற்றது. கிழக்கு மாகாண பிரதம செயலாளராக நேற்றய தினம் திங்கட்கிழமை (03) கடமைகளை பொறுப்பேற்ற பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எப்.ரத்நாயக்க, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர் உள்ளிட்ட அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பலர் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

# குச்சவெளியில் சிறுவர் தின நிகழ்வு

**பைஷல் இஸ்மாயில்**

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி குச்சவெளி பிரதேச சபையின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தின இந்நிகழ்வு தவிசாளர் ஏ.முபாறக் தலைமையில் குச்சவெளி பாலர் பாடசாலையில் இடம்பெற்றது. குச்சவெளி பாலர் பாடசாலையில் கல்வி பயிலும் சிறுவர்களுக்கென சுமார் 7 இலட்சம் ரூபாய் நிதியில் அமைக்கப்பட்ட சிறுவர்கள் விளையாட்டு மையத்தை இன்றைய தினம் தவிசாளர் ஏ.முபாறக் திறந்து வைத்தார். சிறுவர்களுக்கான விளையாட்டு மையம் ஒன்றை அமைத்துத் தருமாறு பாலர் பாடசாலை நிருவாகத்தினர் தவிசாளர் ஏ.முபாறகிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக, அவரின் அயராத முயற்சியினால் சகல வசதிகளுடன் சிறுவர்களுக்கான விளையாட்டு மையம் அமைக்கப்பட்டு சர்வதேச சிறுவர் தினத்தன்று திறந்து வைத்ததன் பின்னர், பாலர் பாடசாலையின் நிருவாகத்தினரிடம் உத்தியபூர்வமாக கையளித்து வைக்கப்பட்டது. இன்றைய தினம் தவிசாளர் ஏ.முபாறக்கினால் பயன்தரும் மரக்கன்றுகள் நட்டி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில், உதவித் தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை செயலாளர் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்.

# இல்ல விளையாட்டுப் போட்டி





**(செங்கலடி நிருபர் சுபா)**

மட்டக்களப்பு – செங்கலடி **Mother Kids Garden** பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியானது ஐயங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் இம் முறையும் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

**Mother Kids Garden** பாலர் பாடசாலையின் அதிபர் திருமதி.உமாரமணி சபேஸ்குமார் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதிகளாக கிழக்குப்பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் ஜீ.பாரத்தீபன், கல்குடா கல்விவலைய பிரதிப்பணிப்பாளர் கே.ஜீவகரன், ரீ.ரமேஸ் – கல்குடா கல்விவலையம் , பாலர் பாடசாலை ஒருங்கிணைப்பாளர் சரோஜினிதேசி மிச்சேல் மற்றும் என்.சிவராமனன், கே.ரிசாந்தன் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். அதிதிகள் மாணவர்களினால் பூமாலை அணிவிக்கப்பட்டு வரவேட்கப்பட்டதுடன் தேசிய கீதம் இசைக்கப்பட்டு கொடிகள் ஏற்றப்பட்டதுடன், மங்கள விளக்கேற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

இம் முறையும் மாணவர்களுக்காக விளையாட்டுக்களான பலூன் உடைத்தல், மிட்டாய் விளையாட்டு, ஓட்டப்போட்டி கதிரைப்பாய்ச்சல் எனப் பல விளையாடடுக்கள் இடம்பெற்றதுடன் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. இதேவேளை பெற்றோர்களுக்கான விளையாட்டுக்களும் இடம்பெற்றிருந்ததுடன் குறிப்பாக இம்முறையும் மாணவர்கள் வினோத உடைப்போட்டியிலும் கலந்துகொண்டிருந்தனர்.

# கணேசா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு



**எஸ்.சபேசன்**

சம்மாந்துறை கல்விவலயத்திற்குட்பட்ட 7 ஆம்கிராமம் சவளக்கடைகணேசா வித்தியாலய மாணவர்களுக்கு சர்வதேச சிறுவர்தினத்தினை முன்னிட்டு சேனைக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் லண்டனில் வசிக்கும் இராஜரெட்ணம் பேணுஜா பிரகாஸ் தம்பதியினர் மாணவர்களுக்கான புத்தகப்பைகளை வழங்கிவைக்கும் நிகழ்வு திங்கட்கிழமை 3 ஆம் திகதி அதிபர் க.பேரானந்தம் தலைமையில் இடம்பெற்றது.இதில் அவர்களது பெற்றோர்களான இராஜரெட்ணம் மற்றும் சந்திரமதி ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கான புத்தகப்பைகளை வழங்கிவைத்தனர் அதேவேளை அன்றைய நாளில் முறிகண்டி நேசக்கரங்கள் அமைப்பின் மூலம் வீரமுனை காயத்திரி இல்லத்தினர் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களையும் வழங்கிவைத்தனர்

# திருகோணமலை ஜனரஞ்சன குளம் பகுதியை பார்வையிட அமைச்சர் விஜயம்



**எப்.முபாரக்**

திருகோணமலை மற்றும் பொலன்னறுவை மாவட்டத்திற்கு செல்லும் பேரிவில ஜனரஞ்சன குளப்பகுதியை சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்வது தொடர்பில் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பொலன்னறுவை மற்றும் திருகோணமலை ஆகிய இரு மாவட்டங்களையும் இணைக்கும் குறுகிய பாதை பேரிவில ஜனரஞ்சன குள வீதியாகும். இந்த வீதியை சுற்றுலா பயணிகளை கவரும் இடமாக மாற்றப்படவுள்ளன. இப்பகுதிகளை பார்வையிடுவதற்காக வேண்டி நீர்ப்பாசன, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷ ான் ரணசிங்க மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கபில அத்துகோரள அந்தப் பகுதிகளுக்கு விஜயம் செய்தார். வருடத்தின் ஒவ்வொரு நாளும் ஜனரஞ்சனா குளப்பகுதியிலிருந்து மகாவலி D வலயத்தைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் அதிக நிலங்களிலும் விவசாயம் செய்வதற்கும் நிரம்பி வழியும் நீரைப் பயன்படுத்தி அதனைச் சுற்றியுள்ள சிறுகுளங்களை நிரப்ப வேண்டிய அவசியம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளன.

அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கால்வாய் அணைகளை புனரமைத்தல் மற்றும் மீனவ சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தினர். இந்த ஆய்வு விஜயத்திற்காக, மெதிரிகிரிய பிரதேச செயலாளர் இந்திக்க கருணாரத்ன, திருகோணமலை மாவட்ட நீர்ப்பாசன பணிப்பாளர் ஏ.ஜபார், சூரியபுர விவசாயிகள் அமைப்பின் தலைவர் தக்சிலா மற்றும் ஜனரஞ்சனா குளம் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.




# ஏறாவூர்பற்று பிரதேச சிறுவர் தின நிகழ்வு



'மாறி வரும் உலகில் மீள் உய்கை மிக்க மூத்த பிரஜைகள்' என்ற தொனிப் பொருளில் நடமாடும் மருத்துவ முகாம் சேவையொன்று ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவின் கித்துள் ஸ்ரீ கிருஷ்ணா மகாவித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி ஈ.சிறிநாத் உட்பட கரடியனாறு வைத்தியசாலை வைத்தியர்கள்,தாதியர்கள்,கிராமசேவை உத்தியோகஸ்த்தர்கள்,மற்றும் சமூக சேவை உத்தியோகஸ்த்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது சிறுவர்களுக்கான மருத்துவ ஆலோசனைவழங்கப்பட்டதுடன்பல்,வாய்தொடர்பாகஉடல் உறுப்புக்களில் ஏற்படும் நோய்களுக்கெதிரான மருத்துவ சேவை வழங்கப்பட்டது. அத்துடன் முதியவர்களுக்கான மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான மருத்துவ வசதியும் வழங்கப்பட்டது. குறித்த மருத்துவ முகாம் சேவைக்கு வந்தாறுமூலை அகம் ஆதரவு கரங்கள் அமைப்பு மற்றும் மட்டக்களப்பு ரோட்டரி கழகம் என்பன அனுசரனை வழங்கியிருந்தனர்